THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 9th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. OBITUARY REFERENCE TO SRI AR. A. RM. CHOCKALINGAM CHETTIAR, AN EX-M.L.A.

MR. SPEAKER : It is my sad duty to inform the House of the demise of Sri AR. A. RM. Chockalingam Chettiar, a former Member of the Madras Legislative Assembly from 1952–57 representing Karaikudi Assembly Constituency on the 7th February 1966.

I request the hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed soul.

On behalf of the House, I will convey the condolence to the members of the bereaved family.

The Members stood in silence for a minute.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Let us take up question No. 212.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, I request that this question may please be postponed to 28th or 29th March, as in the light of my visit to Japan, the answer prepared for this question requires revision.

MR. SPEAKER : Yes. This question is postponed. Let us take up the next question.

சென்னையில் உரத்தொழிற்சாலை

* 213 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமெரிக்க உதவியுடன் சென்னையில் ஒரு உரத் தொழிற்சாலை தமிழக அரசு ஆரம்பிக்க இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India proposes to set up a fertiliser factory in the public sector as an adjunct to the Petroleum refinery near Manali, with the collaboration of the American International Oil Company.

திரு. வை. சங்கரன் : இதனுடைய மதிப்பு எவ்வளவாக இருக்கும். இதனுடைய கெப்பாஸிடி என்னவாக இருக்கும், என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா, அப்படியானல் அதனுடைய விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு லட்சம் டன் நைட்ரஜன் உற்பத்தி செய்யவேண்டும். இதில் அமெரிக்கன் இன்வெஸ்ட்மெண்ட் மாத்திரம் மில்லியன் டாலர், அதாவது ஆறு கோடி டாலர்.

திரு. வை. சங்கரன் : அதிலே என்ன என்ன வகையான உரங்கள் எல்லாம் உற்பத்தி செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் பாஸ்பேட், காம்ப்ளக்ஸ் ஃபெர்டிலைசர்ஸ் முதலியவை தயாரிக்கப்படும்.

திரு. சா. கணேசன் : இதில் சென்னை சர்க்கார் எவ்வளவு முதலீடு போடுகிறது? நிர்வாக முறை முதலிய ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை சர்க்கார் முதலீடு செய்யப்போவதில்லை. ஆனல், சென்னை சர்க்காருக்கு போர்டு ஆப் டைரக்டர்ஸில் ஒரு அங்கத்தினர் கொடுப்பதாக மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது வேலை எடுத்துக்கொள்ளப் பட்டால் முடிப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும்? இதில் கிடைக்கக் கூடிய உரம் பூராவும் நம்முடைய ராஜ்யத்திற்கே உபயோகப் படுத்தப்படுமா ? அல்லது, இந்தியா பூராவும் உபயோகப்படுத்தப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது முடிப்பதற்கு, எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு இரண்டிலிருந்து மூன்று வருஷங்கள் ஆகும். இந்த உரம் இந்திய நாடு பூராவுக்கும் விநியோகம் செய்யப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : இந்த உரத்தினுடைய விலையை நிர்ணயிக்கும் உரிமை யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது எல்லாம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. செ. மாதவன் : அண்மையிலே பாராளுமன்றத்திலே இதைப்பற்றி விவாதிக்கும்பொழுது இது தனிப்பட்ட முதலாளிகளிடம் விடப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. அதன் மூலம் இது தடைப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அமெரிக்கன் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி தனியாகத்தான் இதைச் செய்வதாக ப்ரப்போஸல் வந்திருக்கிறது.